# புதுவையாள்



பிரதேச செயலகம், புதுக்குடியிருப்பு

# புதுவையாள்

## பிரதேச பண்பாட்டு விழா மலர்

## 2014

மலராசிரியர்

**திரு.வீ.பிரதீபன்**

கலாசார உத்தியோகத்தர்

இணை மலராசிரியர்

**திரு. இ. செல்வநாயகம்**

அதிபர், ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை புதுக்குடியிருப்பு.


**பிரதேச பண்பாட்டுப் பேரவை**

**பிரதேச செயலகம்**

**புதுக்குடியிருப்பு.**

# சஞ்சிகை விபர அட்டவணை

| | | |
|---|---|---|
| சஞ்சிகையின் பெயர் | : | **புதுவையாள்** |
| வழிகாட்டலும் ஆலோசனையும் | : | திரு. இ. பிரதாபன்<br>பிரதேச செயலாளர்,<br>புதுக்குடியிருப்பு. |
| பதிவு ஆண்டு | : | 2014. 01. 16 |
| வெளியீடு | : | பிரதேச பண்பாட்டுப் பேரவை<br>பிரதேச செயலகம்,<br>புதுக்குடியிருப்பு. |
| அட்டைப்படம் | : | சுந்தரலிங்கம் தனரூபன் |
| அச்சுப்பதிப்பு | : | |
| பக்கங்கள் | : | |

# மலர்க்குழு

**திரு. இ. செல்வநாயகம்** (உப தலைவர்)

**திரு. இ. பீதாம்பரம்** (பேரவை ஆலோசகர்)

**திரு. செ. சஞ்சீவன்** (உறுப்பினர்)

**திரு. வீ. பிரதீபன்** (செயலாளர்)

**திரு. சி. சின்னராசா** (உறுப்பினர்)

**திரு. கி. லக்கிதன்** (உறுப்பினர்)

**செல்வி. யோ. அஜித்தா** (உறுப்பினர்)

**செல்வி. க. வினோதினி** (உறுப்பினர்)

# வன்னி வளநாட்டில் இந்துசமயம்

சாந்தினி அருளானந்தம்
முதுநிலை விரிவுரையாளர்,
வரலாற்றுத்துறை,
யாழ் பல்கலைக்கழகம்.

இலங்கையின் பண்பாட்டு வரலாற்றில் பிராந்திய ரீதியான தனித்துவங்கள் நீண்ட காலத்துக்குப் பேணப்பட்டு வந்த வகையினை தற்காலத்தில் தொல்லியல் ரீதியாக இனங்காண முடிகின்றது. அந்த வகையில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் தனித்துவம், வன்னிப் பிராந்தியத்தின் தனித்துவம், எனப் பிராந்திய ரீதியாக அவ்வப் பிரதேச வரலாற்றினை குறிப்பாகப் பண்பாட்டு வரலாற்றினை நோக்குவதனை இக்காலத்தில் அவதானிக்கலாம். அவ்வப் பிரதேச புவியியல், வாழ்வியல் போன்றவற்றுக்கமைய இத் தனித்துவங்கள் வேறுபட்டு அமைந்தாலும் ஒன்றிணைந்த தமிழர் பண்பாட்டு அடையாளத்தின் சிறப்புக்கூறுகளாக அவை அமைவதும் சிறப்பான அம்சமெனலாம். எனினும் பண்பாட்டு ஆய்வினைப் பொறுத்துப் பெரிதும் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்படாத பிரதேசமாக **வன்னி வளநாடு** இருந்துவந்துள்ளமையைக் காணலாம். இக் கட்டுரையில் வன்னிப் பிராந்தியம் என வரையறை செய்வது அனுராதபுர இராச்சியத்துக்கு வடக்கேயும், யாழ் குடாநாட்டுக்குத் தெற்கேயும், கிழக்கு மேற்காக அகல விரிந்த நிலப்பரப்பையே ஆகும். ஆயினும் ஒரு காலப்பகுதியில் புத்தளம், திருகோணமலை போன்ற பிரதேசங்களை வன்னிநாடு உள்ளடக்கியிருந்தமை கவனத்திற்குரியது. மேலே குறிப்பிட்ட நிலப்பரப்புக்குள் இன்று மன்னார் மாவட்டம், கிளிநொச்சி மாவட்டம், முல்லைத்தீவு மாவட்டம், வவுனியா மாவட்டம் என்பன உள்ளடங்குகின்றன.

இந்த மாவட்டங்களை உள்ளடக்கிய நிலப்பகுதியில் வாழ்ந்த ஒரு மக்கள் தொகுதிக்குரிய வாழ்வோடு இணைந்த வகையில் இந்துசமயத்துக்குரிய வழிபாட்டு மரபு பேணப்பட்டு வந்துள்ளதைப் பல்வேறு சான்றுகளும் எடுத்துக்காட்டுகின்றன.

இலங்கையின் வரலாற்றைக் கூறும் பாளி இலக்கியங்களில் நாகதீபம் அல்லது **உத்தரதேசம்** என அழைக்கப்பட்ட வட இலங்கை பற்றிய செய்திகள் மிகக்குறைவாகும் ஆயினும் அவற்றில் இடம்பெறும் சில குறிப்புக்களும், மறைமுகச் செய்திகளும், தற்காலத்தில் கிடைத்து

வரும் தொல்லியற் சின்னங்களும், பழைமையான வழிபாட்டு முறைகளும், ஐதிகங்களும் வட இலங்கை பற்றிக் குறிப்பாக வன்னி வள நாட்டின் இந்துசமயம் சார் அம்சங்களையும், தனித்துவத்தையும் விளங்கிக் கொள்ளும் ஆதாரங்களாக அமைகின்றன. இத்தகைய பின்னணியில் நோக்கும் போது இந்துசமய வழிபாட்டு முறை இப்பிராந்தியத்தில் நீண்ட வரலாற்றினைக் கொண்டிருப்பதனை அவதானிக்க முடிகின்றது.

இவ்வாறு தனித்துவமான வாழ்வியலைக் கொண்ட வன்னிப்பிரதேச மக்களின் பண்பாட்டின் பகைப்புலம் இந்துசமயம் என்பதைத் தொல்லியற் சான்றுகள் எடுத்துக் காட்டுகின்றன.

வன்னி வளநாடு யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கும், சிங்களப் பண்பாட்டுப் பிராந்தியத்துக்கும் இடையே ஒரு இடை நிலைப்பரப்பாக (Butter Region) விளங்குகின்ற தன்மையின் அடிப்படையில் அவ்வப்போது பௌத்த மதத்தின் செல்வாக்கினைப் பெற்றுக் கொண்டமைக்கான தொல்லியற் சான்றுகளும் உள்ளன. ஆயினும் பௌத்ததின் வருகைக்கு முந்திய இலங்கையின் பூர்வீக குடிகளான **நாகர்கள்** இந்துசமய வழிபாட்டு முறைகளைப் பின்பற்றியிருந்தனர் என்பதைப் பேராசிரியர் சிற்றம்பலம் தொல்லியல், மற்றும் மகாவம்ச அகக் குறிப்புக்கள் முதலியவற்றின் அடிப்படையில் எடுத்துக்காட்டியுள்ளார். இவர்களில் ஒரு பகுதியினரே பௌத்த சமயம் இங்கு பரவியபோது அதனை ஏற்றுக் கொண்டனர் என்பதனை பெருங்கற்கால மையங்களை அண்டிக் காணப்படும் தூபிகள், தமிழ் பிராமிக் கல்வெட்டுக்கள் போன்றன உணர்த்துகின்றன. பௌத்த சமயத்தில் இன்றுங் காணப்படுகின்ற இந்து சமயத்தின் சில கூறுகளும் இதற்குச் சான்றுகளாகின்றன. எவ்வாறாயினும் இன்று இப்பிராந்தியமானது பெரும்பான்மையும் இந்துசமயத்தவரையே கொண்டிருப்பதும் கவனத்திற்கொள்ளத்தக்கது.

இன்று இந்துசமயம் என்று சுட்டப்படும் வழிபாட்டு முறைகளின் தோற்றம், ஆக்ககாலம் என அழைக்கப்படும் பெருங்கற்காலத்திலிருந்தே ஆரம்பித்ததாக ஆய்வாளர் சுட்டிக்காட்டுவர். இலங்கையில் இடைக்காலத்தைத் தொடர்ந்து கி.மு 800 அளவில் பெருங்கற்காலம் தொடங்கியதாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையின் பல பாகங்களிலும் இனங்காணப்பட்ட இக்காலத்துக்குரிய பண்பாட்டு மையங்கள், தென்னிந்தியப் பெருங்கற்கால மையங்களுடன் அதிக நெருக்கமுடையனவாகக் காணப்படுகின்றன. **புத்தளத்திலுள்ள பொம்மரிப்பிலும் தமிழகத்தில் ஆதிச்சநல்லூரிலும் மேற்கொள்ளப்பட்ட**

**அகழ்வாய்வுகள்** தெளிவாக இப்பண்பாட்டு ஒற்றுமையைப் புலப்படுத்துகின்றன. யாழ்ப்பாணக் குடாநாட்டில் கந்தரோடை, ஆனைக்கோட்டை, சாட்டி, காரைநகர் போன்ற இடங்களிலும், இரணைமடு, மாந்தை, பரந்தன், பூநகரி, மாமடு போன்ற பல இடங்களிலும் பெருங்கற்காலப் பண்பாட்டு அம்சங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

வரலாற்றுக் காலத்துக்குரிய பல்வேறு அம்சங்களையும் முன்னோக்கிப் பார்த்தால் அவை பெருங்கற்காலத்திலிருந்தே தோன்றின என்பதை தொல்லியல், வரலாற்று ஆய்வாளர் வலியுறுத்துவர். இப்பின்னணியில் வரலாற்று உதயகாலம் **இரும்புக் காலம்** என அழைக்கப்பட்டதோடு பல அம்சங்கள் முதன் முதலாகத் தோன்றத் தொடங்கியமையால் ஆக்ககாலமெனவும் குறிப்பிடப்படுகின்றது. இத்தகைய நிலையிலேயே பெருங்கற்காலத்துக்குரிய ஈமப்படைகளில் இருந்து இந்து சமயத்துக்குரிய ஆக்கக் கூறுகளும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக இந்துசமயத்தில் இன்று காணப்படும் சடங்குகளும், வழிபாட்டு முறைகளும் இப் பண்பாட்டிலிருந்து ஆரம்பமாயின என்பது தென்னிந்திய இலங்கை அகழ்வாய்வுகளின் முடிபாகும். இக்கால மக்கள் இறந்தோரை மதித்ததன் பின்னணியில் அவர்களை ஞாபகப் படுத்தும் நினைவுச் சின்னங்களை அமைத்ததோடு அவர்கள் மறு உலக வாழ்விலும் இவ்வுலக வாழ்வின் வசதிகளை அனுபவிக்க வேண்டும் என்ற விருப்பின் அடிப்படையில் அவர்கள் வாழுங் காலத்திற் பயன்படுத்திய பொருட்களையும், இறந்தோரின் எலும்பு எச்சங்களுடன் இணைத்துப் புதைத்தனர். இறந்தோர் தொடர்பாகப் பேணப்பட்ட இம்முறை இந்துக்களின் மூதாதை வழிபாடு, மறுபிறப்பு நம்பிக்கை என்பனவற்றோடு தொடர்புடையனவாக இருப்பதை இன்றும் காணலாம். மேலும் பெருங்கற்காலப் பண்பாட்டில் இடுகாடு மட்டுமன்றி வயல்கள், குளங்கள், குடியிருப்புகளும் முக்கியத்துவம் பெற்றிருந்ததை அவதானிக்க முடிகின்றது. இப்பின்னணியில் நோக்கும் போது வன்னிப் பிரதேச குளங்கள், அவற்றை பின்னிணைப்பாகக் கொண்ட ஊர்களின் பெயர்கள், பரந்த வயற்பரப்புக்கள் ஆகியன பெருங்கற்காலத்தின் தொடர்ச்சியை எடுத்துக் காட்டுவனவாகவே தென்படுகின்றன. பெருங்கற் காலத்தைய பண்பாடு நிலவிய இடங்களில் ஒன்றாகிய புத்தளம் அக்காலத்தில் வன்னிப் பிராந்தியத்துடன் இணைந்திருந்தது. இங்கு காணப்பட்ட பெருங்கற்கால அம்சங்கள், தமிழ் நாட்டிலுள்ள ஆதிச்ச நல்லூரின் பெருங்கற்காலத்துடன் நெருக்க முடையதாக இருப்பதன் பின்னணியில் அப்பிராந்தியத்தில் வாழ்ந்த மக்களின் குடியேற்றம் வன்னிப் பகுதியிலும் இடம்பெற்றிருக்கலாம் எனப் **பேராசிரியர் சிற்றம்பலம்**

கருதுகின்றார். சமய அடிப்படையில் ஒருங்கிணைவை ஆதிச்ச நல்லூர், பொம்பபரிப்பு ஆய்வுகள் மட்டுமன்றி இலங்கையின் வட பகுதியில் வேறிடங்களிலும் குறிப்பாகக் கந்தரோடையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளும் வெளிப்படுத்தியுள்ளன. **வேல், இருதலை முத்தலைச் சூலங்கள், சுவஸ்திகா குறியீடுகள்** போன்றன மட்டுமன்றி இக்காலச் சுடுமண் பாவைகளும் இவ்விடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. சிறப்பாகப் பொம்பரிப்பில் ஈமச்சின்னங்களுடன் வேல் இணைக்கப்பட்டிருந்தது. செழிப்புடன் தொடர்புடைய தாய்த் தெய்வ வழிபாட்டினை வெளிப்படுத்தும் சுடுமண்பாவைகள் **வட்டக்கச்சி, உருத்திரபுரம், சாஸ்திரி கூழாங்குளம்** முதலிய இடங்களில் கிடைத்துள்ளன. இத்தகைய சான்றுகளின் அடிப்படையிலேயே தென்னிந்தியாவைப் போன்று இலங்கையிலும் பெருங்கற் காலப் பண்பாட்டுடனேயே சடங்குகள், சம்பிரதாயங்கள் நம்பிக்கைகள் என்பவற்றோடு, நாகவழிபாடு, மரவழிபாடு, யக்ஷ வழிபாடு, முருகவழிபாடு கணபதிவழிபாடு, தாய்த்தெய்வ வழிபாடு, சிவவழிபாடு போன்றனவும் ஆரம்பமாகியதாக எடுத்துக் காட்டப்படுகின்றது. பெருங்கற்காலத்தைத் தொடர்ந்து வந்த வரலாற்றுக்கால கட்டத்தில் கிடைக்கப் பெறும் பிராமிச் சாசனங்களிலும், சங்க இலக்கியங்களிலும் மேற்கூறிய வழிபாட்டு முறைகள் மற்றும் மரபுகளின் தொடர்சி காணப்படுகின்றது. வன்னிப் பெருநிலப் பரப்பைப் பொறுத்தவரை **மாமடு** முதலான இடங்களில் கிடைத்த பிராமிச் சாசனங்களோடு, கட்டிட, சிற்ப அழிபாடுகள், நாணயங்கள், ஏட்டுச்சுவடிகள், வாய்மொழி மரபுகள், இலக்கியங்கள் போன்றன அங்கு இந்து சமயம் செல்வாக்குப் பெற்றிருந்ததை எடுத்துக் காட்டுகின்றன.

இந்துசமயத்தின் வழிபாட்டு மரபினைப் பொறுத்த வரை அது ஆகமம் சார் நிலையிலும், சாரா நிலையிலும் பேணப்பட்டு வந்துள்ளது. ஆகமங்களை அடிப்படையாகக் கொண்டு, அந்தணர்களை முதன்மைப்படுத்தி, ஆலயங்களை மையப்படுத்தி ஆகமம் சார் வழிபாட்டு முறை பின்பற்றப்படுகின்றது. ஆனால் ஆகமம் சாரா வழிபாட்டில் ஆகமங்களோ, அந்தணர்களோ அன்றிப் பாரம்பரியமான நம்பிக்கைகளும் சடங்குகளுமே முதன்மைப்படுத்தப்படுகின்றன. ஆலயங்கள் அற்ற ஆகமம் சாரா பண்டைய வழிபாட்டு முறையில் இன்று சிற்சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆயினும் மக்களின் ஆரம்ப கால வாழ்வியல் முறைகளையும் சமுதாய வளர்ச்சியையும் ஆகமம் சாரா வழிபாட்டு முறைகளே அறியத் தருகின்றனவென்பது மறுக்க முடியாத உண்மையாகும். வன்னியைப் பொறுத்தவரை ஆகமம் சார் வழிபாட்டு முறையை விட ஆகமம் சாராத வழிபாட்டு முறையானது தனித்துவமானதாகவும்

சிறப்பானதாகவும் நோக்கத்தக்கதாகும் வன்னிப் பிரதேசத்துக்குள்ளேயே இவை தனித்துவம் உடையனவாக சிறப்பம்சங்களைக் கொண்டு காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

கிராமிய வழிபாடாக இனங்காணப்படும் ஆகமம் சாரா வழிபாட்டு மரபுகளில் சிறு தெய்வங்கள் முக்கிய இடம் பெறுகின்றன. இவ்வழிபாட்டு முறையானது வழிபடும் இடம், காலம், பிரதேசம் என்பவற்றுக்கேற்ப வெவ்வேறு பட்ட வழிபாட்டு முறைகளைக் கொண்டிருப்பது சிறப்பான அம்சமாகும். இங்கு சாதாரண மக்களில் ஒருவரே பூசகராக கடமையாற்றுவார். ஐயனார், பெரியதம்பிரான், வீரபத்திரர் வல்லிக்கண்ணன், அண்ணமார், காடேறி, மாடன், சுடலை மாடன், கறுப்பன், பதினெட்டாம் கறுப்பன், சங்கிலிக்கறுப்பன், விரமான், குறும்பர், பெத்தப்பர், வன்னியர், விறுமன், மதுரைவீரன், இராக்கியன், சந்நியாசி, முனி, காத்தவராயன், மாடசாமி, பைரவர், முனியப்பர், நரசிங்கர் போன்ற ஆண் தெய்வங்களும், மாரி, காளி, நீலி, பிடாரி, சீதை, கொத்தி, எல்லையம்மன், கண்ணகி, திரௌபதை, பேச்சியம்மன், வெக்காளி, முண்டகக் கன்னி, நாச்சிமார் முதலிய பெண் தெய்வங்களும் ஆகமம் சாரா வழிபாட்டில் வழிபடு தெய்வங்களாகப் போற்றப்படுகின்றன. வன்னிப் பிரதேசம் காடுகளையும், குளங்களையும், வயல்களையும் கொண்டிருப்பதால் எல்லைத் தெய்வங்களும், காவற் தெய்வங்களும் அதிக முக்கியத்துவத்தைப் பெறுகின்றன. மடை, பொங்கல், குளிர்த்தி, படையல் எனப் பல வழிபடுமுறைகள் இங்கு பின்பற்றப்படுகின்றன. முன்னைய காலகட்டங்களில் மாமிச உணவு படைக்கும் வழக்கம், பலியிடுதல் என்பனவும் இக்கோயில்களில் இடம் பெற்றன. இன்றைய காலகட்டத்தில் தனித்துவமான இவ்வழிபடு மரபில் புதிய தன்மைகள் இணைத்திருப்பதைக் காணலாம். அந்தணர் பூசை செய்தல், ஆகமக் கிரிகைகளைப் பின்பற்றுதல் என்பவற்றோடு, கிராமியத் தெய்வங்களும் ஆகம நெறிப்பட்ட தெய்வங்களாக மாறிவருகின்றன. உதாரணமாகக் கண்ணகி வழிபாடு புவனேஸ்வரி, இராஜராஜேஸ்வரி போன்ற அம்மனின் பெயர்களைப் பெற்றிருப்பதை கூறலாம்.

வன்னி மண்ணுக்குரிய தனித்துவமான வழிபாடுகளில் நரசிங்க வழிபாடு மேற்கொள்ளப்படுகின்றது. ஒட்டுசுட்டான், நெடுங்கேணி, ஸ்கந்தபுரம், பூந்தோட்டம் முதலான இடங்களில் இவ்வழிபாட்டினை அவதானிக்கலாம். நரசிங்கர் கோயில்களில் பொங்கல் மேற்கொள்ளப்படும் போது பூசாரி அத்தெய்வப் பாடல்களைப்பாடி ஆடுவதையும் மிருகபலி கொடுக்கப்பட்டு. அதன் குருதியைப் பொங்கல்

படையலின் மீது ஊற்றி வழிபடுவதையும் காணலாம். மிருக பலி போன்றன இன்றைய காலகட்டத்தில் விவாதத்திற்கு உரியதாகக் காணப்படுவதால் சில இடங்களில் இச் செயற்பாடு அருகி வருகின்றமை குறிப்பிடத்தக்க தாகும்.

வன்னியில் ஐயனார் வழிபாடும் முக்கியத்துமுடைய ஒன்றாகக் காணப்படுகின்றது. காடுகளில் உறைவதாக கருதப்படும் இத்தெய்வம் தேன் எடுப்போர், வழிப் போக்கரைக் காக்கும் தெய்வமாகவும், குளங்களை உடையாது பாதுகாப்பதாகவும், வரட்சியின் போது ஏற்படும் நோய்களைத் தீர்க்கும் தெய்வமாகவும், மழைதரும் தெய்வமாகவும், போற்றப்படுகின்றது. ஆண்டாள்குளம் ஐயனார் கோயில், நெடுங்கேணி ஐயனார் கோயில், புதுக்குடியிருப்பு ஐயனார் கோயில் போன்றன உதாரணமாக கூறத்தக்கணவாகும் **புதுக்குடியிருப்பின் மன்னாகண்டல் பகுதியில் ஐயனார் ஆலயம் ஒன்றின் சிதைவுகள் காணப்படுகின்றன. இவ் ஆலயம் பற்றி ஆராயின் ஐயனார் வழிபாட்டின் தொன்மை வெளிக் கொண்டுவரப்படலாம்.** பரம்பரையாக வேளாளர் குலத்தில் உள்ள ஒருவரே பூசகராக இவ்வாலயங்களில் கடமையாற்றுவது வழக்கமாகும். நாகதம்பிரான் வழிபாடும் இப்பிரதேசத்தில் அடையாலம் காணப்படுகின்ற பிறிதொரு வழிபாடகும் பெரும்பாலும் வயல்களில் காணப்பட்ட பாம்புகளின் தொல்லைகளிலிருந்து விடுவிக்கும் தெய்வமாக நாகதம்பிரான் உள்ளார் இத்தெய்வம் உறையும் ஆலய மண்ணை மருந்தெனக் கூறுவதோடு பாம்பு கடித்த கடிவாயில் அதனை வைத்தால் உடல், நலம் பெறலாம் என்ற நம்பிக்கை இம்மக்களிடையே காணப்படுகின்றது.

பெண் தெய்வ வழிபாடுகளில் கண்ணகி வழிபாட்டுக்குப் பெயர் பெற்ற இடமாக வன்னிப் பிரதேசத்தில் சிறப்பாக வற்றாப்பளை விளங்குவதைக்காணலாம். இலங்கையில் தெற்கு, கிழக்கு போன்ற பிராந்தியங்களில் இவ் வழிபாடு சுதேச சமய மரபுகளுடன் இணைத்தும், தனித்தும் போற்றப்படுகின்றது. இருப்பினும் வற்றாப்பளைக் கண்ணகையம்மன் தனித்துவமுடையதாக விளங்குவதனைக் காணலாம். வைகாசி விசாகப் பொங்கல் இங்கு நடைபெறுவதுடன் அதனோடு தொடர்பான பல்வேறு நிகழ்ச்சிகளும் நடைபெறும். கடல் நீரில் விளக்கேற்றுதல், மடைப்பண்டம் கொண்டு செல்லுதல். பொங்கல் முடிந்த அடுத்த நாள் கதிர்காம தல யாத்திரை தொடங்குதல் என்பன நிகழ்வது கண்ணகி வழிபாட்டின் சிறப்பு இப்பகுதியில் மேலோங்கியிருப்பதை எடுத்துக் காட்டும்.

கிராமிய வழிபாடு என்பது வன்னிப் பிராந்தியத்தில்

ஆழ, அகலவுள்ள ஒரு வழிபாடாகும். வன்னியின் எல்லாப்பகுதிகளிலும் உள்ள கிராமிய வழிபாட்டினை இச்சிறு கட்டுரையில் உள்ளடக்க முடியாது என்பது ஒருபுறமிருக்க இவ்வழிபாட்டு மரபுகள் பற்றி ஆழமான ஆய்வுகள் முழுமையாக மேற்கொள்ளப்படவில்லை என்பது கவனத்தில் கொள்ளப்படத் தக்கதாகும். கலையாடுதல், பறை, உடுக்கு முழக்குதல், குறிசொல்லுதல், மாந்திரீகம், மற்றும் பில்லி, சூனியம், முனி என்பவற்றோடும் இவ் வழிபாடு இணைந்து காணப்படுகின்றது. வன்னி வளநாட்டின் கிராமிய வழிபாட்டாய்வு, பண்டைய தமிழரின் சமூக பண்பாட்டு வாழ்வினை இனங்காண உதவுமென்பதை மறுக்க முடியாது.

ஆகமம் சார் நிலையில் வன்னிப் பிராந்தியத்தில் பல்வேறு கோயில்கள் காலத்துக்குக் காலம் சிறப்புப்பெற்றிருந்தனவென்பதைச் சான்றுகள் அறியத்தருகின்றன. சிவன், அம்மன், பிள்ளையார், முருகன், விஷ்ணு வழிபாட்டுக்குரிய ஆலயங்கள் இங்கு சிறப்புற்றுக் காணப்படுகின்றன. ஒட்டுசுட்டானில் உள்ள தான்தோன்றீச்சரம் புகழ் பெற்ற ஆலயமாக வன்னி மண்ணில் விளங்கி நிற்கின்றது. மேலும் இலங்கையில் ஆரம்பகாலத்தில் இருந்த பஞ்ச ஈஸ்வரங்களில் திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், முன்னேஸ்வரம் ஆகிய மூன்றும் (அக்கால வன்னிப் பிராந்தியத்தியம் திருகோணமலை, சிலாபம் என்பவற்றை உள்ளடக்கியிருந்தது) வன்னிப் பிராந்தியத்திலேயே காணப்பட்டன என **பேராசிரியர் சிவசாமி** குறிப்பிடுகின்றார். முதலிரு கோயில்களும் பல்லவர் கால நாயன்மார்களால் பாடல் பெற்றவையாகும். உருத்திரபுரம் சிவன்கோயில், பூநகரியில் கண்டுபிடிக்கப்பட்ட சிவாலயம் என்பன சோழர்களோடு தொடர்புபடுத்தப் படுகின்றன. யாழ்ப்பாண இராசதானிக் காலத்திலும், ஐரோப்பியர் ஆட்சிக்காலத்திலும் வன்னி வள நாட்டில் இந்து சமயம் நிலைபெற்றிருத்ததை தொல்லியற் சான்றுகள் உள்ளிட்டவை புலப்படுத்தி நிற்கின்றன. முல்லைத்தீவு மாவட்டத்தில் குமாரபுரம் சித்திரவேலாயுதர் கோயில் போத்துக்கேயரால் அழிக்கப்பட்ட கோயில்களில் ஒன்றாகும். அக்காலத்தில் அக் கோயில் விக்கிரகங்கள் சில யாழ்பாணத்தில் வடமராட்சியிலுள்ள கந்தவனக் கடவை கோயிலில் பாதுகாக்கப்பட்டன. 20ஆம் நூற்றாண்டிலேயே காடர்ந்திருந்த இக் கோயில் இனங்காணப்பட்டுப் பின்னர் வழிபாட்டுக்குரியதாகியது. மேலும் **புதுக்குடியிருப்புப் பிரதேசத்துக்குட்பட்ட குரவில் என்ற இடத்தில் பாழடைந்த ஒரு ஆலயம் மண்ணில் புதையுண்டு இருக்கிறது. இவ்வாலயம் குமாரபுரம் கோயிலை ஒத்த புராதன வரலாறு கொண்டிருக்கலாம்.** இன்றும் வன்னிப்பிராந்தியத்தில் ஆங்காங்கே பல்வேறு காலகட்டங்களிலும் அமைக்கப்பட்ட கோயில்களின் எச்சங்கள் இனங்காணப்படுகின்றன.

ஆயினும் அவையாவும் விரிவான ஆய்வுகளுக்கு உட்படுத்தப்படவில்லை. mannual of vanni என்ற நூலை எழுதிய **லூயிஸ்** என்பார் இந்து சமயக் கட்டிடங்களின் சிதைவுகள் உள்ளிட்ட சில சான்றுகளைத் தமது நூலில் குறித்துள்ளமை கவனத்துக்குரியது.

வன்னி வள நாடு வட இலங்கையில் தனித்துவம் மிக்க ஒரு பிராந்தியமாகக் காணப்படுகின்றது. அதன் புவியியல், மற்றும் வாழ்வியல் சூழல் தனித்துவமான பண்புகளைக் கொண்டிருப்பதற்கு வாய்ப்பாக இருந்ததெனலாம். அதனுடைய தனித்துவத்துக்கும் சிறப்புக்கும் அங்கு பின்பற்றப்பட்டு வருகின்ற ஆகமம் சாராத, ஆகமம் சார்ந்த இந்து சமய வழிபாட்டு முறையும் ஒரு பிரதான காரணமென்பதைக் கவனத்தில் கொள்ளல் தகும்.